

நாமக்கல் கிழக்கு மாவட்டம் கொல்லிமலை ஒன்றியம் சேலூர் நாடு பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க., தமிழக வெற்றி கழகம் மற்றும் மாற்றுக் கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளரும், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினருமான கே.பொன்னுசாமி, தொகுதி பொறுப்பாளர் ரேகா பிரியதர்ஷினி, ஒன்றிய தி.மு.க. செயலாளர் செந்தில் முருகன், சேந்தமங்கலம் ஒன்றிய செயலாளர் அசோக்குமார், முன்னாள் ஒன்றிய திமுக செயலாளர்கள் காளியப்பன், பாலா (எ) பாலசுந்தரம், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஞானசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம் திருமலைப்பட்டி கிராமத்தில் கிராம அறிவுசார் மையம் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கிராம அறிவு சார் மையத்திற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி. கௌதம், ஜெயபிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் அவர்கள் சந்தித்து பேசினார். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ், மாநில குழு உறுப்பினர் ஆறுமுக நயினார் ஆகியோர் உள்ளனர்.

# காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 23 -

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு நேற்று முன்தினம் (21.7.2025) பிறந்தநாள்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது



சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவை வலுப்படுத்துவதில் மல்லிகார்ஜுன கார்கே முக்கிய பங்கு வகிக்கிறார். பிரிவினையை விதைக்க முயலும் சக்திகளுக்கு எதிராக உறுதியாக நிற்கும் தலைவர்** என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

## அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்று இறுதி மரியாதை செலுத்துவார்!

# கேரள அரசியலில் புரட்சிகர மரபை ஆழமாக விட்டுச் சென்றுள்ளார் தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன்! செவ்வணக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜூலை 23 -**

**கேரள மாநில முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் (வயது 102) அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார். இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் "கேரள அரசியலில் புரட்சிகர மரபை ஆழமாக விட்டுச் சென்றுள்ளார் தோழர் வி.எஸ்.அச்சுதானந்தன்! செவ்வணக்கம்" என்றும் குறிப்பி ட்டுள்ளார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் சார்பிலும் மக்கள் சார்பாகவும் அச்சுதானந்தன் அவர்களின் இறுதிச் சடங்கில் அமைச்**



**சர் எஸ்.ரகுபதி பங்கேற்று மரியாதை செலுத்துவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் (மலையாளத்தில்) பதிந்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

"தோழர் வி.எஸ். அச்சுதானந்தன் அவர்கள் கேரளத்தின் அரசியல் மனச்சான்றில் ஆழப் பதிந்ததொரு புரட்சி மரபை விட்டுச் சென்றிருக்கிறார்.

மக்களின் மனங்கவர்ந்த தலைவர், இறுதி மூச்சு வரையில் பொதுவுடைமைவாதி, முன்னாள் முதலமைச்சர் என கொள்கை அரசியலுக்கும், பொதுத் தொண்டுக்கும் இலக்கணமாக அவர் திகழ்ந்தார்.

வி.எஸ். எனும் ஒரு மிகப் பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், மற்றும் கேரள மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மாபெரும் தலைவரான வி.எஸ். அச்சுதானந்தன் அவர்களுக்கு எனது சார்பிலும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் அமைச்சர் ரகுபதி நேரில் இறுதி மரியாதை செலுத்திடுவார்.

செவ்வணக்கம் தோழரே!"

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## குடியரசுத் துணைத் தலைவர்

# ஜெகதீப் தன்கர் ராஜினாமா!

## குடியரசுத் தலைவருக்கு கடிதம் அனுப்பினார்!

*புதுடெல்லி, ஜூலை 23 -*

*இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், மருத்துவக் காரணங்களுக்காக தனது பதவியை ராஜினாமா செய்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். அவரது ராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவருக்கு அவர் அனுப்பியுள்ளார்.*

*குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் ராஜினாமா தொடர்பாக இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், "மருத்துவக் காரணங்களுக்காகவும், மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றவும் அரசியலமைப்பின் பிரிவு 67(a) இன் படி, உடனடியாக அமலுக்கு வரும் வகையில், இந்திய துணைக் குடியரசுத் தலைவர் பதவியை நான் இதன் மூலம் ராஜினாமா செய்கிறேன்.*

*எனது பதவிக் காலத்தில் பராமரித்த அசைக்க முடியாத ஆதரவிற்கும், இனிமையான அற்புதமான பணி உறவுக்கும் இந்திய குடியரசுத் தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பிரதமருக்கும், அமைச்சர்கள் குழுவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமரின் ஒத்துழைப்பும் ஆதரவும் விலைமதிப்பற்றவை. மேலும் நான் பதவியில் இருந்த காலத்தில் நிறைய கற்றுக்கொண்டேன்.*

*நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமிருந்தும் நான் பெற்ற அரவணைப்பு, நம்பிக்கை மற்றும் பாசம் என்றென்றும் போற்றப்படும், என் நினைவில் பதிக்கப்படும்.*

*நமது மாபெரும் ஜனநாயகத்தில் துணைத் தலைவராக நான் பெற்ற விலைமதிப்பற்ற அனுபவங்கள் மற்றும் நுண்ணறிவுகளுக்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.*



தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படியும் ,துணைமுதல்வர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் கழக மாணவர் அணியின் சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை இயக்கம் குறித்த துண்டு பிரசுரங்களை கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளரும் நகர்மன்ற தலைவருமான மன்னை த.சோழராஜன் மன்னார்குடி ராஜகோபால சுவாமி கலைக்கல்லூரி மாணவ மாணவிகளிடையே வழங்கினார். உடன் மாவட்ட, ஒன்றிய, நகர மாணவரணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளில் நடந்து முடிந்த 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்த 78 அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளி நிர்வாகத்தை பாராட்டி தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி கேடயம் வழங்கி பாராட்டினார். தஞ்சை மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், அரசு கல்வி அலுவலர்கள், மருதுபாண்டியர் கல்லூரி முதல்வர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் பல்வேறு நலத்திட்ட உதவிகளால்

# விவசாயிகளின் காவலனாகப் போற்றப்பட்டு வருகிறார்!

## சேலத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம், ஜூலை 23–

முதலமைச்சர் அவர்கள் கால்நடை வளர்ப்போரின் நலனை பாதுகாக்கவும். வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 50 சதவீத மானியத்தில் புல் நறுக்கும் கருவிகளை நேற்று முன்தினம் வழங்கி தகவல் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் மின்விசையில் இயங்கும் புல்நறுக்கும் கருவிகளை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா. பிருந்தா தேவி, முன்னி லையில் நேற்று (21.07.2025) சேலம் ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறையும் வளர்ச்சி அடைந்து தன்னிறைவு பெற வேண்டும் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கால்நடை வளர்ப்போரின் நலனை பாதுகாக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்துள்ளார்கள்.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 16 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 14 கால்நடை பெரு மருத்துவமனைகள், 152 கால்நடை மருத்துவமனைகள், 2,741 கால்நடை மருந்தகங்கள், 56 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 815 கால்நடை கிளை நிலையங்கள் மூலமாக பல்வேறு நலத்திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் (NADP) கீழ் ரூ.75.83 இலட்சத்தில் 100 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஏழ்மை நிலையில் உள்ள 2,000 பயனாளிகளுக்கு ரூ.3.82 கோடி மதிப்பீட்டில் 100% மானியத்தில் தலா 5 வெள்ளாடு, செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டுக்கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புற பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி பண்ணை நிறுவ 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று 110 ஏக்கரில் ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் மாநில தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் 50% மானியத்தில் 400 பயனாளிகளுக்கு புல் நறுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற பெண்களுக்கு நாட்டின கோழிக்குஞ்சுகள் (40 கோழிக் குஞ்சுகள் வீதம்) 50% மானியத்தில் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் 350 பயனாளிகளுக்கு தலா ரூ.35,000 மதிப்பில் கறவை மாடு வழங்க திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட பசுந்தீவனங்கள் கால்நடைகளுக்கு அப்படியே வழங்கினால் முழுமையான பலன் கிடைக்காது என்பதன் அடிப்படையில் அதனை சிறு சிறு துண்டுகளாக வெட்டி வழங்கும்பட்சத்தில் எளிதில் ஜீரணம் அடைந்து கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் உற்பத்தி திறன் பெருகும். இதனால் கால்நடை வளர்ப்போர் பயனடைவார்கள். இதற்காக சேலம் மாவட்டத்தில் இன்றைய தினம் 2024–2025 ஆம் நிதியாண்டில் 210 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.60.91 இலட்சம் மதிப்பீட்டில் மின் விசையால் இயங்கும் புல் நறுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் காவலனாக இதுபோன்ற பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களின் வாயிலாக பயனடைந்த பயனாளிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.அர.பிரகாசம், துணை இயக்குநர் மரு.தமிழரசு, உதவி இயக்குநர் மரு.ரகுபதி, மாமன்ற உறுப்பினர் திருமதி. கிரிஜா குமரேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கே.ஜி.எம்.பாவா (எ) முகமது ஆசாத் எட்டாம் ஆண்டு நினைவு நாள்!

*ஈரோடு, ஜூலை 23 -*

*ஈரோடு முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கே.ஜி. எம்.பாவா (எ) முகமது ஆசாத் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.*



*இவர் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளிலும், கூட்டுறவு சங்க நிர்வாகியாகவும் பொறுப்பு வகித்தார். மேலும் கழகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றவர். கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் தவறாமல் கலந்து கொண்டு சிறைச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவரது மகன் கே.ஜி. எம்.தம்பி (எ) குலாம் உசேன் ஈரோடு தெற்கு மாவட்டம், மாநகர மீனவரணி தலைவராக கழக பணியாற்றி வருகிறார்.*



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் தளி சட்டமன்றத் தொகுதி அரசு கலைக் கல்லூரியில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கு. செல்வம் தலைமையில் 'ஓரணியில் தமிழ்நாடு' விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யபட்டது. இதில் தேன்கனிக்கோட்டை பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.சேகர், துணை அமைப்பாளர் பாருக் ஆகியோர் கலந்து கொண்டனர்.




நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் தளபதி அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட கழகச் செயலாளர் , தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோ தலைவர் என்.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், என்.சதாசிவம், சோ.பா.மலர்வண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.